சென்னை, புரசைவாக்கம் சி.எஸ்.ஐ. ஈவார்ட் பள்ளியில் நேற்று (31.07.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான கற்றல் அடைவு குறித்த ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றினார். இக்கூட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் முனைவர். மு. பழனிச்சாமி, சென்னை முதன்மைக்கல்வி அலுவலர் முனைவர்.அ. புகழேந்தி, தலைமையாசிரியர்கள் மற்றும் பள்ளி கல்வி துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பள்ளிக் கல்வித்துறை தான்

சிறந்த சமுதாயத்தினை உருவாக்கித் தரும் மிகப்பெரிய துறை!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

சென்னை, ஆக.1-

சென்னை, சி.எஸ்.ஐ. ஈவார்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் சென்னை மாவட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான கற்றல் அடைவு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை, சி.எஸ்.ஐ. ஈவார்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் சென்னை மாவட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான கற்றல் அடைவு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநில திட்டக் குழுவின் கற்றல் அடைவு அறிக்கை (SLAS) வெளியிட்ட பின்பு, சென்னையில் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலர் அனைவரும் தலைமையாசிரியர்களை விட்டுக் கொடுக்காமல் பேசினார்கள். இது அவர்கள் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையினை காட்டுகிறது. அந்த நம்பிக்கையினை நீங்கள் வரும் காலத்தில் தேர்வு முடிவுகளின் மூலம் பிரதிபலிக்க வேண்டும்.

சென்னை மாவட்டத்தில் பிற மாவட்டங்களை விட தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகம். தனியார் பள்ளி மாணவர் சேர்க்கை போக மீதமுள்ள பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குகின்ற ஒரு மிகப்பெரிய பணியை நாம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த கலந்துரையாடலில் உங்களிடமிருந்து கருத்துகளைப் பெற்ற பிறகு, எங்களை பார்த்து நீங்களும், உங்களை பார்த்து நாங்களும், ஊக்கம் பெருகின்ற, ஒரு நம்பிக்கை பெறுகின்ற கூட்டமாக இந்தக் கூட்டம் அமைந்திட வேண்டும்.

ஒரு துறையினுடைய அமைச்சர் அந்த துறையினை இயக்குவதைக் காட்டிலும் அவர் கொண்டு வரும் நிர்வாகம் தான் அந்த துறையினை இயக்கும். அது போன்று தலைமை ஆசிரியர்கள் பள்ளி வளாகத்தில் இருந்தாலும் இல்லை என்றாலும் அந்த நிர்வாகம் தானாக பள்ளியினை இயக்க வேண்டும்.

திருவொற்றியூர், கோடம்பாக்கம், ராயபுரம் வடக்கு பகுதியை சார்ந்திருக்கின்ற பள்ளிகள் சிறப்பாக செயல்படுகிறது. உங்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடையார், தண்டையார்பேட்டை, ராயபுரம் சவுத், தேனாம்பேட்டை, ராயபுரம், சென்ட்ரல் பகுதியை சார்ந்திருக்கின்ற பள்ளித் தலைமையாசிரியர்கள் முயற்சி செய்தீர்கள் என்றால் அடுத்த கட்ட உயர்வுக்கு போகலாம். அண்ணாநகர், திருவிக நகர் பள்ளிகள் பின் தங்கி உள்ளனர். நீங்கள் நல்ல முயற்சி செய்து, அதிகப்படியாக கவனம் செலுத்திட வேண்டும்.

மணற்கேணி, திறன், TN SPARK, மாதிரிப் பள்ளிகள், திறன்மிகு வகுப்பறை போன்ற திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அவற்றை சிறப்பாக நாம் பயன்படுத்தி மாணவர்களுக்கு சிறப்பான கல்வியினை வழங்கிட வேண்டும். நம்மை நம்பி வரும் பிள்ளைகள் ஒரு வெற்றுக் காகிதமாக வருகின்றனர் அவர்கள் 12ஆம் வகுப்பினை முடிக்கும் போது உலகத்தையே புரட்டி போடும் ஒரு புத்தகமாக உருவாக்கும் மிகச் சிறந்த பணியினை நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

தலைமையாசிரியர்கள் அனைவரும் 360 டிகிரி கோணத்தில் பள்ளியினை கண்காணிக்க வேண்டும். ஆசிரியர்கள் எவ்வாறு பாடம் நடத்துகிறார்கள், பிள்ளைகள் எப்படி நடந்து கொள்கிறார்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் எவ்வாறு பணியாற்றுகிறார்கள், பள்ளிக்கு யார் வருகிறார்கள் என அனைத்து விதத்திலேயும் பள்ளியினை கண்காணிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு RTE சட்டப்படி "ஆல் பாஸ்" வழங்குகிறோம், 3ஆம் வகுப்பு படித்த பிள்ளைகள் 3ஆம் வகுப்பில் படிக்க வேண்டியதை, படித்த விட்ட பிறகுதான் 4ஆம் வகுப்புக்கு செல்கிறார்களா? என்பதை SLAS மூலமாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்றில்லாமல் ஒவ்வொரு தலைமையாசிரியரும் அதனை உறுதி செய்தல் வேண்டும்.

பிற துறைகளுக்கும் பள்ளிக் கல்வித் துறைக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசம், நம்முடைய துறையில் வெறும் முதலீடுகள் மட்டுமே இருக்கும், நம்மால் பணமாக திருப்பித் தர முடியாது. ஆனால், ஒரு சிறந்த சமுதாயத்தினை வட்டியோடு திருப்பித் தரக்கூடிய ஒரு மிகப்பெரிய துறை பள்ளிக்கல்வித் துறை தான். வேறு எந்த துறைக்குமே இல்லாத ஒரு சிறப்பு பள்ளிக் கல்வித் துறைக்கு உள்ளது. எவ்வளவு பெரிய ஆளுமைகளாக இருந்தாலும், அதை உருவாக்கித் தரக்கூடியவர்கள் ஆசிரியர்கள் தான்.

அடுத்த ஆண்டு இதே மாதிரி ஒரு SLAS அறிக்கை சார்ந்து உங்களை நாங்கள் சந்திக்கும்போது, சென்னை மாவட்டத்தை நான் பாராட்டுகின்ற விதமாக அமைய வேண்டும். வருகை தந்த ஒவ்வொருவரையும் நான் பாராட்டுகின்ற விதமாக அது அமைந்திட வேண்டும், இந்த உறுதியை ஏற்கக்கூடிய ஒரு நாளாக இந்நாள் இருக்க வேண்டும். இன்று முதலமைச்சர் அவர்களை சந்தித்த போது அரசுப் பள்ளிகளில் 4 இலட்சத்துக்கும் அதிகமாக மாணவர் சேர்க்கைக்காக முதலமைச்சர் அவர்கள் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

சேர்ந்த மாணவர்களை வகுப்பறைகளில் அமரவைப்பது மட்டும் போதாது, அவர்களை தேர்ச்சி பெறச் செய்வது, அதிக மதிப்பெண் பெறச் செய்வதன் மூலம் அரசுப் பள்ளிகளைத் தேடி வந்து படிப்பதற்காக இன்னும் அதிகப்படியான பிள்ளைகள் வர வேண்டும். உங்களுக்கு நானும் பள்ளிக் கல்வித்துறையும் உறுதுணையாக இருப்போம் .

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் முனைவர். மு.பழனிச்சாமி, சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர். அ.புகழேந்தி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றியச் செயலாளர் டி.குமார் பங்கேற்பு! காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதி

மெய்யூர் ஓடை ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

க.சுந்தர் எம்.எல்.ஏ. மனுக்களை பெற்றார் – 1000 பேருக்கு உணவு வழங்கினார்

காஞ்சிபுரம், ஆக. 1 -

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமிற்கு வருகை தந்த ஆயிரம் பேருக்கு மதிய உணவினை நேற்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் மெய்யூர் ஓடை ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நேற்று காலை நடைபெற்றது. இந்த முகாமிற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழங்கல் அலுவலர் பாலாஜி, திமுக ஒன்றிய செயலாளர் டி. குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் சுப்பம்மாள், சுந்தரமூர்த்தி, தாமோதரன், சுந்தரமூர்த்தி, முனுசாமி, நாகம்மாள் மாரி, கோமளா ஐயப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார். ஒன்றியக் குழு துணை பெருந்தலைவர் வசந்தி குமார் அனைவரும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார். இதனைத் தொடர்ந்து ஜாதிச் சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று ஆகிய மனுக்களை உடனடியாக பெற்று பரிசினை செய்து சான்றிதழ்களை பொது மக்களுக்கு உடனடியாக வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆயிரம் பேருக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ மத்திய உணவு பரிமாறினார்.

இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மாணிக்கவேல், சூர்யா, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சிவராமன், சேகர், ஒன்றிய நிர்வாகிகள் கார்த்தி, பாலமுருகன், வெங்கட்ராமன், முரளி, ரத்தினமாலா, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வளசரவாக்கம், மண்டல அலுவலகத்தில் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிப்பதற்காக கூடுதலாக 25 புதிய B.O.V. வாகனங்களை மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., கே.ராஜி, எம்.சி., மாமன்ற உறுப்பினர்கள் ச.சங்கர்கணேஷ், எம்.சி., செல்வி ரமேஷ், எம்.சி., ரமணி மாதவன், எம்.சி., சாந்தி ராமலிங்கம், எம்.சி., வட்ட கழக செயலாளர் ஆ.செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் உடனிருந்தார்கள்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

நேற்று (31 – 7 – 2025) நிகழ்வுகள்!

1. ரயில்வேயில் லோகோ பைலட்டுகளுக்கு உரிய ஓய்வு அளிக்கப்படுகிறதா? காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறதா?

கனிமொழி கருணாநிதி கேள்வி!

இந்திய ரயில்வேயில் லோகோ பைலட்டுகள் எனப்படும் இன்ஜின் ஓட்டுனர்களுக்கான ஓய்வு, ரயில்வேயில் காலி பணியிடங்களை நிரப்பும் முறை குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இந்திய ரயில்வேயில், ரயில் இன்ஜின்களை இயக்கும் லோகோ பைலட்டுகளுக்கு வேலை நேரம் மற்றும் விடுப்புக் கொள்கை உள்ளதா?

அப்படியானால் ஒரு வேலை நாளில் ஒரு லோகோ பைலட்டின் மொத்த வேலை நேரம் எவ்வளவு? அதில் இடைவேளை மற்றும் இயற்கை உபாதைக்கான நேரம் உள்ளிட்ட விவரங்கள் என்ன?

பணியில் இருக்கும் லோகோ பைலட்டுகளுக்கு உணவு உட்கொள்வதற்கும் இயற்கை உபாதைகளுக்கு சென்று வரவும் இடைவேளை வழங்க வேண்டும் என்ற அவர்களின் நீண்டகால கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்தது என்பது உண்மையா? இதனால்தான் பெரிய ரயில் விபத்துகளில் மனித தவறுகள் காரணமாகக் கூறப்படுகின்றன என்பது உண்மையா?

லோகோ பைலட்டுகளின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நீண்ட தூர அல்லது அதிவேக ரயில்களில் இரண்டு லோகோ பைலட்டுகள் அல்லது உதவி பைலட்டுகளை நியமிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

லோகோ பைலட்டுகளுக்கு வெளியூர் பயணத்தில் இருந்து திரும்பிய பின் கட்டாயமாக 16 மணிநேர ஓய்வும், வாரந்திர 30 மணிநேர ஓய்வும் முறையாக வழங்கப்படவில்லை என்ற குறைகளை அரசாங்கம் அறிந்திருக்கிறதா?

லோகோ பைலட்டுகள் மற்றும் உதவி லோகோ பைலட்டுகளுக்கு போதுமான ஓய்வு வழங்கப்படுவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ரயில்வேயில் தற்போது உள்ள லோகோ பைலட்டுகள் மற்றும் உதவி லோகோ பைலட்டுகளுக்கான காலியிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவற்றை நிரப்பாததற்கான காரணங்கள் என்ன?" ஆகிய கேள்விகளை எழுப்பியிருந்தார்கள்.

2. தேசி நெடுஞ்சாலைகளில் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் முறையாக இல்லாதது ஏன்?!

கோவை – கணபதி ராஜ்குமார்

தேனி – தங்க தமிழ்செல்வன் கேள்வி

தேசிய நெடுஞ்சாலைகளில் (NHs) சரியான நேரத்தில் மற்றும் சரியான பராமரிப்பு இல்லாதது, சிற்றுண்டிச்சாலை/கேன்டீன், சரியான வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் சாலை/கார் பயனர்களுக்கான ஓய்வு அறைகள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாதது குறித்து ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என திமுக மக்களவை உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார் மற்றும் தங்க தமிழ்செல்வன் நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளனர்.

மேற்சொன்ன காரணங்களின் காரணமாக பல பயணிகள் சுங்கவரி செலுத்தியும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

சாலையை முறையாகப் பராமரித்தல் மற்றும் அனைத்து பராமரிப்புப் பணிகளும் முடியும் வரை சுங்கச்சாவடிகள் வசூலிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்தல் ஆகியநிபந்தனைகளை மீறியதற்காக ஒப்பந்த நிறுவனம் மீது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமா?

தேசிய நெடுஞ்சாலைகளில் கார்/சாலைப் பயனர்களின் வசதிக்காக மேற்கண்ட குறைபாடுகளை நீக்குவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமா?

3. வெள்ள மேலாண்மைக்கு புதிய திட்டங்கள் என்ன?

தேனி தங்க தமிழ்செல்வன் கேள்வி!

நாடு முழுவதும் வெள்ள மேலாண்மை மற்றும்நீர்ப்பாசனத்திற்காகஅரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் மொத்ததிட்டங்கள்மற்றும் திட்டங்களின் எண்ணிக்கை குறித்து திமுக தேனி மக்களவை உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டங்களின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில், மாநில வாரியாக, ஒவ்வொன்றிலும் ஒதுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதிகளின் விவரங்கள் என்ன மற்றும் மேற்கூறிய காலகட்டத்தில் இந்தத் திட்டங்கள் மூலம் அடைந்த சாதனை என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

4. சிறு தொழில்களுக்கு ஒதுக்கீடு செய்த நிதியை வழங்காதது ஏன்?

டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி!

மைக்ரோ மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நம்பிக்கை நிதி(CGTMSE) மற்றும் பல முக்கிய MSME திட்டங்கள் கடந்த இரண்டு நிதியாண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியை குறைவாகப் பயன்படுத்தியதன் காரணங்கள் கேட்டு திமுக வட சென்னை திமுக மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அப்படியானால், 202223 மற்றும் 202324 ஆம் ஆண்டுகளில் CGTMSE மற்றும் பிற முக்கிய MSME திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன? ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகவும் சரியான நேரத்திலும் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும், நுண் மற்றும் சிறு தொழில்முனைவோர் மத்தியில் இந்தத் திட்டத்தின் கடன் மற்றும் சலுகைகளைப் பெறுவதற்கான விழிப்புணர்வு, மக்களைச் சென்றடைதல் மற்றும் எளிதாக்குவதை மேம்படுத்துவதற்கும் அமைச்சகம் எடுத்து வரும் திருத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

5. நெடுஞ்சாலையோரங்களில் மரம் நடும் திட்டங்கள் செயல்திட்டமும் நடவடிக்கையும் என்ன?

ஆரணி – தரணிவேந்தன் கேள்வி

தோட்டக்கலை, மரங்களை இடமாற்றம் செய்தல், அழகுபடுத்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவைகளை உள்ளடக்கிய பசுமை நெடுஞ்சாலைகள் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன என ஆரணி திமுக எம்.பி. தரணிவேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார். தமிழ்நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் மற்றும் நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை விவரங்கள் என்ன?

கார்பன் பிரித்தெடுத்தல், காற்றின் தர மேம்பாடு மற்றும்

பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இதுவரை அடையப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூக நன்மைகள் என்ன? நெடுஞ்சாலைகளில் பசுமைப் போர்வையை செயல்படுத்துவதிலும் பராமரிப்பதிலும் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

பசுமை நெடுஞ்சாலைகள் முயற்சியில் நிலைத்தன்மை மற்றும் சமூக பங்கேற்பை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்று பல்வேறு கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

6. உணவு பதப்படுத்தும் தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பு?

பொள்ளாச்சி – ஈஸ்வரசாமி கேள்வி!

உணவு பதப்படுத்தும் தொழில் (FPI) மூலம் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக அரசாங்கத்தால் சமீபத்தில் உருவாக்கப்பட்ட திட்டங்களின் பெயர்கள் மற்றும் செயல்பாடுகள் என்ன?

தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள்?

நடப்பு ஆண்டில் உணவு பதப்படுத்தும் துறைக்கு அரசு வழங்கிய நிதி எவ்வளவு? பல்வேறு திட்டங்களுக்கு அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட மானியங்களின் விவரங்கள் என்ன?

7. வீடுதோறும் குடிநீர் இணைப்பு தண்ணீர் தரத்தை பரிசோதிக்க நடவடிக்கை என்ன?

தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி

கிராமப்புறங்களில் வீடுகளுக்கு பிரத்யேக குடுநீர் இணைப்பு வழங்கும் திட்டமான ஜல் ஜீவன் மிஷன் (JJM) இன் கீழ் ஒற்றை கிராமத் திட்டங்கள் (SVS) மற்றும் பல கிராமத் திட்டங்களின் (MVS) கீழ் வரும் பேரூராட்சிகள் அந்தந்த கிராம பஞ்சாயத்துகளால் பராமரிக்கப்படுகிறதா என தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒற்றை கிராமத் திட்டங்கள் (SVS) மற்றும் பல கிராமத் திட்டங்களின் (MVS) கீழ் வரும் பேரூராட்சிகளில் இத்திட்டத்தின் கீழ் ஒரு கிராம பஞ்சாயத்துக்கு ஒரு வேட்பாளர் பயிற்சி பெறுகிறார் என்பது உண்மையா?

குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக நீர் தர பரிசோதனையை ஊக்குவிக்க குடிநீர் தர பரிசோதனை ஆய்வகங்களை அமைக்குமாறு மாநில/யூனியன் பிரதேச அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளதா? மேலும், ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து பேரை தேர்ந்தெடுத்து அதில் பெண்களுக்கு முன்னுரிமை அளித்து, குடிநீரின் தரத்தை சோதிக்க அடையாளம் கண்டு பயிற்சி அளிக்குமாறு அரசு அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்களும், மேற்கூறிய நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி குறித்த விவரங்களும் என்ன? என்று அவர் கேட்டுள்ளார்.

8. உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு புதிய மானியத் திட்டங்கள்

பெரம்பலூர் – அருண் நேரு கோரிக்கை

சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரிய அலகுகள் உட்பட பல்வேறு அளவிலான உணவு பதப்படுத்தும் தொழில்களை (FPI) ஆதரிக்க அரசாங்கம் புதிய மானியத் திட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்து திமுக மக்களவை உறுப்பினர் அருண் நேரு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரங்கள் பின்வருமாறு.

குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இந்தத் திட்டங்களின் மொத்த ஒதுக்கீடு மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் என்ன?

பழங்கள், காய்கறிகள் மற்றும் அழுகக்கூடிய பொருட்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கும், அவற்றின் ஆயுளை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் எடுத்த குறிப்பிட்ட நடவடிக்கைகள் என்ன?

உலக உணவு இந்தியா போன்ற நிகழ்வுகள் மூலம் முதலீடு மற்றும் உலகளாவிய கவனத்தை அதிகரிக்க அரசாங்கம் முன்முயற்சிகளை எடுத்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

இந்தத் திட்டங்கள் மதிப்பு கூட்டலை மேம்படுத்துதல், உணவு வீணாவதைக் குறைத்தல் மற்றும் இந்தியாவை ஒரு முன்னணி உணவு பதப்படுத்தும் இடமாக ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தபடும் நடவடிக்கைகள் என்ன?

9. குழாய் மூலம் வீட்டு எரிவாயு விநியோகம் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்துவது எப்போது?

திருவண்ணாமலை – சி.என்.அண்ணாதுரை மற்றும்

காஞ்சிபுரம் – க.செல்வம் கேள்வி

ஒன்றிய அரசு நகர எரிவாயு விநியோக (CGD) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலம் முழுவதும் குழாய் இயற்கை எரிவாயு (PNG) வலையமைப்பை அமைக்க இருப்பது குறித்த தகவல்களை நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர்கள் சி என் அண்ணாதுரை மற்றும் க. செல்வம் கேள்வி எழுப்பினார்கள்.

PNG சேவை தற்போது செயல்பாட்டில் உள்ள தமிழ்நாட்டின் நகரங்களின் பெயர்கள் என்ன? தமிழ்நாட்டின் குறிப்பாக கிராமப்புற மற்றும் நகராட்சிப் பகுதிகளில் PNG செயல்படுத்தலை விரைவுபடுத்த ஏதேனும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதா? தமிழ்நாட்டில் PNG நெட்வொர்க் மேம்பாட்டின் போது சரியான நேரத்தில் செயல்படுத்தப்படுவதையும் பாதுகாப்பு இணக்கத்தையும் உறுதிசெய்வதற்கு அரசாங்கம் ஏதேனும் கண்காணிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதா? என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

10. புற்றுநோய் நோயாளிகளுக்கு அரசு உயர்தர சிகிச்சை வழங்கும் திட்டத்தின் நிலை என்ன?

ஆர்.கிரிராஜன் கேள்வி

நாட்டில் புற்றுநோய் நோயாளிகளுக்கு சீரான உயர்தர சிகிச்சை மற்றும் மருத்துவப் பராமரிப்பை வழங்க தேசிய புற்றுநோய் கட்டமைப்பு (NCG) திறம்பட செயல்படுவதற்கு அதிக நிதி வழங்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து திமுக மாநிலங்கலவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

NCGஇன் கீழ் புற்றுநோய் மருத்துவமனைகள் மற்றும் ஆராய்ச்சி மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கத்திடம் உள்ள திட்டம் என்ன? நாட்டில் புற்றுநோய் நோயாளிகள் குறித்த தரவுகளைச் சேகரித்து தொகுக்க NCG எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.